<u>சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.</u>

எம்.சி.ஓ.பி. எண். 207/2015

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி. . 2

| | | |
|---|---|---|
| பெயர் | . . | கார்த்தி |
| தகப்பனார் / கணவர் பெயர் | . . | |
| தொழில் | . . | |
| கிராமம் | . . | |
| தாலுக்கா | . . | |

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20ஆம் நாள் வெள்ளிக்கிழமை திரு. சி. குமாரவர்மன், எல்.எல்.எம்., சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**<u>முதல் விசாரணை</u>**

ஆறுமுகம், கண்ணப்பன் இருவரும் என் பக்கத்துவீட்டில் வசித்து வருகிறார்கள். 2015 ஆம் ஆண்டு விபத்து நடந்தது. நான் சி.டி.100 இருசக்கர வாகனத்தில் சென்றேன். இருசக்கர வாகனத்தை நான் ஓட்ட ஆறுமுகமும், கண்ணப்பனும் பின்னால் உட்கார்ந்து வந்தார்கள். அப்போது இரவு 8.00 மணி இருக்கும். செய்யாரிலிருந்து செல்லும்போது விஸ்டம் கல்லூரிக்கு முன்பாக வளைவில் விபத்து நடந்தது. ஆறுமுகம், கண்ணப்பன் எந்தவேலையும் இல்லாமல் இருந்து வந்தார்கள். ஆறுமுகம் கொத்தனார் வேலை செய்ததாக சொல்வது தவறு. கண்ணப்பன் அரசாங்க வேலைக்கு எழுதிப்போட்டுவிட்டு காத்துக்கொண்டிருந்தார். விபத்து நடந்த இடம் இருட்டான பகுதி. அந்த இடத்தில் பெரிய வேகத்தடை இருந்தது. அவசர வேலையாக சேத்தமங்கலத்திலிருந்து செய்யாறு நோக்கி வந்தோம். அவசர வேலையாக வேகமாகதான் வந்தேன். வேகத்தடையை கவனிக்காமல் வேகமாக வந்து 3 பேரும் கீழே விழுந்துவிட்டோம். எனக்கு பின்னால் வந்த கார் இடிக்கவில்லை. எனக்கு ஓட்டுநர் உரிமம்

இல்லை. காவல் துறையினர் என்னை மருத்துவமனையில் வந்து விசாரிக்கவில்லை. நாங்கள் 3 பேரும் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை. வண்டி ஆறுமுகம் வண்டி. செய்யாறு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டோம். வண்டி ஓட்டிவந்த நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை. பின்னால் வந்த கார் இடித்துவிட்டதாக நான் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை. செய்யாறு அரசு மருத்துவமனையில் போலிசார் ஆறுமுகத்தை தான் விசாரித்தார்கள். கார் ஓட்டிய நபர் யார் என்று தெரியாது. நான் இழப்பீடு கோரி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் இந்நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. விபத்து வழக்கில் தள்ளுபடி செய்வதில் ஆட்சேபனை உள்ளதா என்று நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கேட்டார்கள் நான் ஆட்சேபனை இல்லை என சொல்லிவிட்டேன். கார் இடிக்கவில்லை என்றும் என்னுடைய தவறால் தான் விபத்து ஏற்பட்டது என்று எடுத்து சென்றார்கள். விபத்திற்கு பிறகு ஆறுமுகம் உடல்நலம் தேர்ச்சி பெற்று செண்ட்ரிங் வேலை செய்துவருகிறார். 4-5 மாதத்திற்கு பிறகு வேலை செய்ய ஆரம்பித்தார். கண்ணப்பனுக்கு 2-3 மாதத்தில் வேலை கிடைத்து சர்க்கரை ஆலையில் பிட்டர் உதவியாளராக இருக்கிறார். விபத்திற்கு பிறகு இருவரும் நன்றாக இருந்து வருகிறார்கள். வழக்கில் அழைப்பாணை வந்தது.

**குறுக்கு விசாரணை**

நான் செய்யாறு சர்க்கரை ஆலையில் மஸ்தூர் பிரிவில் வேலை செய்து வருகிறேன். கண்ணப்பன் எனக்கு தம்பி. நானும் கண்ணப்பனும் சொந்தம் இல்லை தம்பி என சொல்வேன். ஆறுமுகம் பக்கத்து வீட்டுக்காரர் சொந்தம் கிடையாது. 25 சென்ட் நிலம் கொடுத்ததால் எனக்கு சர்க்கரை ஆலையில் வேலை கிடைத்தது. 25 சென்ட் நிலத்திற்கு எத்தனை பேர் வாரிசு என்று தெரியாது என் அப்பா வேலை எனக்கு கிடைத்தது. 25 சென்ட் நிலம் என்னுடைய குடும்ப சொத்து என்றும் அதை 1987 ஆம் ஆண்டு சர்க்கரை ஆலைக்காக எடுத்துக்கொண்டது என்றும் அதற்காக தான் எனக்கு வேலை

கிடைத்தது என்று சொன்னால் என் அப்பாவுடைய வாரிசு வேலை எனக்கு கிடைத்தது. சர்க்கரை ஆலையில் 3 நபர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது, 2 நபர்களுக்கு கொடுக்கமுடியாது என்று மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நடந்தால் என்றால் தெரியாது. மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எனக்கு சாதகமாக அமைந்து அதன்பேரில் மேல்முறையீடு செய்தார்கள் என்றால் தெரியாது. மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் 2வது மேல்முறையீடு வழக்கு நடந்தது என்றால் தெரியாது. 2வது மேல்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டு 2 நபர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள் என்றால் தெரியாது. அதனைத்தொடர்ந்து கண்ணப்பன் செய்யாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு தொடர்ந்து கண்ணப்பன் வேலை வாங்கினார் என்றால் தெரியும். கண்ணப்பன் வேலைக்கு சேர்ந்த பிறகுதான் நான் வேலைக்கு சேர்ந்தேன். கண்ணப்பன், ஆறுமுகம், நான் உறவினர்கள் என்றும் வழக்கிற்காக உறவினர்கள் இல்லை என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தை நான் தான் ஓட்டிச்சென்றேன். 50 கி.மீ வேகத்தில் சென்றேன். என் ஊருக்கு செல்ல விபத்து நடந்த சாலை வழியாக தான் சென்றுவருவேன். அந்த சாலை பழக்கப்பட்ட சாலை தான். 12 ஆண்டுகளாக வண்டி ஓட்டுகிறேன். வண்டியில் வரும்போது வேகத்தடை உள்ளதால் மெதுவாக செல்லவேண்டும் என்று எனக்கு தெரியும் ஆனால் அன்று அதிவேகமாக வந்தேன். விபத்திற்கு முழு காரணமும் நான் தான். அதனால் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் என் மீது தான் தவறு என்றும் வழக்கை வாபஸ் வாங்கிக்கொள்வதாக சொன்னேன். விபத்திற்கு காரணம் நான் தான் என்பதால் இழப்பீட்டு தொகையை நான் தான் கொடுக்க வேண்டும் என்றால் அது எப்படி கொடுக்க முடியும் தெரியாமல் விழுந்து விட்டேன். எனக்கு பின்னால் உட்கார்ந்து வந்த கண்ணப்பனுக்கு எலும்பு முறிவு ஏற்பட்டு சென்னை மியாட் மருத்துவமனையில் சேர்த்தார்கள். ஆறுமுகத்திற்கு வயிற்றில் அடிப்பட்டு செய்யாறு மருத்துவமனையில் இருந்து மேல் சிகிச்சைக்காக செங்கல்பட்டு

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக சென்னை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நான் வேகமாக வண்டி ஓட்டியதால் தான் விபத்து ஏற்பட்டு ஆறுமுகத்திற்கும் கண்ணப்பனுக்கும் அடிப்பட்டது என்றால் வேகமாக ஓட்டியது உண்மை தான். நான் வேகமாக ஓட்டியதால் தான் ஆறுமுகத்திற்கும் கண்ணப்பனுக்கும் அடிப்பட்டது உண்மை.